செ. கு. எண்: 148 நாள் : 17.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 17.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 15.11.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், உளுந்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு ராயர் என்பவரின் மகன் வேலு மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

16.11.2015 அன்று வேலூர் மாவட்டம், அரியூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயகுமார் என்பவரின் மகள் பிரீத்தி;

அரக்கோணம் வட்டம், அமீர்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு முனுசாமி என்பவரின் மகன் கெங்கமந்திரி மற்றும் வாலாஜா வட்டம், புளியந்தாங்கள் கிராமத்தைச் சேர்ந்த திரு பொன்னுசாமி என்பவரின் மனைவி அமுதா;

–– ஆகியோர் மழையின் காரணமாக வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

16.11.2015 அன்று வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், கதவாளம் கிராமத்தைச் சேர்ந்த திரு சிவமூர்த்தி என்பவரின் மனைவி கிளியம்மாள்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், மேலமையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு கோபால்பிள்ளை என்பவரின் மனைவி அஞ்சலை; கூடுவாஞ்சேரியைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜி என்பவரின் மகன் முனுசாமி மற்றும் பட்ரவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு ரமேஷ் என்பவரின் மகன் சதிஷ்;

–– ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த **8** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**